**செய்தி வெளியீடு எண்: 441** **நாள்: 19.07.2019**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்**
**திரு. எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்களின்**
**திருவுருவப் படத்தை திறந்து வைத்து**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய உரை – 19.7.2019**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

சமூக நீதி காக்க அல்லும் பகலும் அயராமல் உழைத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த விழாவிற்கு தலைமை ஏற்றுள்ள
மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களே !

முன்னிலை வகிக்கும்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே !

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே!
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே!
மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே!
மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!
வருகை தந்து சிறப்பித்துக் கொண்டு இருக்கிற
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே,
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
அரசு கொறடா அவர்களே,
பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களே,
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவின் நாயகன் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் புதல்வன் திரு. ராமதாஸ் மற்றும் அவர்களின் குடும்பத்தினரையும், அவர் மீதுள்ள அன்பின்

காரணமாக இவ்விழாவிற்கு வருகை புரிந்திருக்கும் சகோதர, சகோதரிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

**“இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்**
**இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்”**

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, வாழும்போதே வரலாறாக வாழ்ந்த மரியாதைக்குரிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் முழு திருஉருவப் படத்தை, வரலாற்று சிறப்புமிக்க நம்முடைய சட்டமன்றத்தில் திறந்து வைக்கும் இந்த விழாவில், பங்கேற்பதை நான் பெருமையாக கருதுகிறேன், நமது சட்டப் பேரவை வரலாற்றில் இது ஒரு சிறப்பான நிகழ்வாகும்.

நாட்டுக்காகவும், சமுதாயத்திற்காகவும் உழைத்த நல்லவர்களை சிறப்பிப்பதில், மரியாதை செலுத்துவதில், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் முன்மாதிரியாக திகழ்கிறது. அந்த வகையில், இந்திய விடுதலைப் போராட்டத்திலும் சமுதாயப் பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட மரியாதைக்குரிய திரு.ராமசாமி படையாச்சியார் அவர்களின் தன்னலமற்ற உழைப்பை பெருமைப்படுத்தவும், அன்னாரின் நினைவை சரித்திரம் போற்றும் வகையிலும், அன்னாரின் முழு உருவப் படத்தை இம்மாமன்றத்தில் நிறுவுவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு பெருமைப்படுகிறது.

இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்றால், அந்த வளர்ச்சிக்கு உரமாக இருப்பது பல விடுதலைப் போராட்டத் தலைவர்களின் தியாகங்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட தியாக சீலர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தான் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள்.

1952ஆம் ஆண்டு தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை தோற்றுவித்து, அதே ஆண்டில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், திரு. ராமசாமி படையாச்சியார் உட்பட உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த 19 வேட்பாளர்கள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களவை தேர்தலிலும், இக்கட்சியை சேர்ந்த நான்கு

வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். மக்கள் பணியாற்றுவதில் மற்ற தலைவர்களுடன் இணக்கமாக பணியாற்ற திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் தயங்கியதில்லை.

1954ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அமைச்சரவையில் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக பணியாற்றினார். அதன் பின்னர் 1980 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்ட தலைவர்களில் முதல்வரிசை தலைவராக திகழ்ந்தவர் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள். மிகவும் பின்தங்கிய மக்களை முன்னேற்றுவதற்காக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை உருவாக்க காரணமாக இருந்தவர் திரு. ராமாசாமி படையாச்சியார்அவர்கள். குறிப்பாக, வன்னியர் சமூகத்திற்கு மாநிலத்தில் 20 சதவீத ஒதுக்கீடும், மத்தியில் 2 சதவீத ஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை உழைப்பாளர் கட்சி மாநாட்டில் நிறைவேற்றிய முதல் தலைவர் இவர்தான்.

தீர்மானம் நிறைவேற்றியது முக்கியமல்ல. அந்த தீர்மானம் வெற்றி பெற தொடர் முயற்சி மேற்கொள்வதில் தான் அந்த தீர்மானத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. இந்த தீர்மானத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தவர் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள்.

பின்தங்கிய மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த அந்த உன்னத தலைவர் இந்த நாட்டில் பிறந்ததும், வாழ்ந்ததும் நாம் செய்த பாக்கியம் என்பதால், அவர் பிறந்த நாளான செப்டம்பர் 16ஆம் நாள், அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று 29.6.2018 அன்று நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன்.

மேலும், திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் பிறந்த கடலூர் மாவட்டத்தில், அரசு சார்பாக நினைவு மண்டபமும், அதில் அன்னாருடைய ஒரு முழு உருவ

வெண்கலச் சிலையும் அமைக்க வேண்டும் என்று வன்னியர்குல பெருமக்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அதனை முழு மனதாக ஏற்று, 19.7.2018 அன்று மேட்டூரில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் திரு. ராமசாமி படையாச்சியாருக்கு நினைவு மண்டபமும். முழு உருவ வெண்கலச் சிலையும் அமைக்கப்படும் என்று நான் உறுதியளித்தேன்.

வாக்குறுதி கொடுத்ததோடு நிற்காமல், அதனை உடனடியாக நிறைவேற்றும் ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சி தான் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களிடம் குருகுல பயிற்சி பெற்ற நாங்களும், "**சொன்னதை செய்வோம்! சொல்லாததையும் செய்வோம்!**" என்ற கொள்கையின் அடிப்படையில், கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு 2 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1.5 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கி, அதில் நினைவு மண்டபமும், திருஉருவ வெண்கலச் சிலையும் அமைக்க 14.9.2018 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இம்மண்டபம் விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயிரோட்டமுள்ள இந்த ஓவியம், திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் கம்பீரம், கண்ணியம் மற்றும் ஆளுமையை தத்ரூபமாக பிரதிபலிக்கின்றது. இந்த ஓவியத்தைத் தீட்டிய ஓவியரை நான் மனதார பாராட்டுகிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * * * *